I.A.No.3-2023 in O.S.No.85-2023
Date:08.09.2025

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**முன்னிலை: சு. அபூர்வா, பி.ஏ., எல்.எல்.பி.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**
**2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08–ஆம் நாள் திங்கள்கிழமை**
**இ.ம.எண்.3/2023**
**இன்**
**அ.வ.எண்.85/2023**

A. மாமூண்டி
(வாதி தனக்காகவும், பழனி வட்டம் பெத்தநாயக்கன்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு மாமூண்டி கோவில் 27 பங்காளி குடும்பங்களுக்கு பாத்தியப்பட்ட பெரியகுடும்பத்தார் என்ற முறையில்) ....மனுதாரர்/வாதி

// எதிர் //

1. T.முருகன்
2. M.பாண்டியன்
3. M.சுப்பிரமணி
4. M. பெரியசாமி
5. P. குரு ....1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 5 பிரதிவாதிகள்
6. பழனியம்மாள்
7. மீனாட்சி
8. சுமதி ....6, 7, 8 எதிர்மனுதாரர்கள்/ Proposed Parties

இந்த மனுவானது என் முன்பாக இதுநாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையின் கீழ் இருந்து வந்தும் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் **திரு.M.மணிக்கண்ணன், B.A.,B.L.,** ஆகியோர் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் தரப்பில்

வழக்கறிஞர்கள் **திரு.P.மதியழகன், B.Sc.,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், இறுதி விசாரணைக்காக 28.08.2025 ஆம் தேதி வந்தபோது, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்,

<u>**உத்தரவு**</u>

அசல் வழக்கில் இந்த 6, 7, 8 எதிர்மனுதாரர்கள்/Proposed Parties–களை 6, 7, 8 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் **கட்டளை 1 விதி 10 (2) மற்றும் பிரிவு 151–ன்** கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்படுகிறது.

<u>**2. மனுவின் சுருக்கம்:–**</u>

2.1. மனுதாரர் அவருக்கும் அவரது பங்காளிகளான பழனி வட்டம், பெத்தநாயக்கன்பட்டி கிராமத்தில் இருக்கும் மாமூண்டி திருக்கோவிலுக்கு உரிமைப்பட்ட 27 பங்காளிகளின் பெரிய குடும்பத்தார் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் பிராது தாக்கல் செய்யும் சமயம் 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மீது இந்த வழக்கு தாக்கல் செய்து அவர்கள் தரப்பில் வழக்கறிஞர் நியமனம் செய்யப்பட்டு எதிர்வாதஉரை தாக்கல் செய்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்து வருகிறது என்றும், இவ்வாறான சூழ்நிலையில் மனுதாரர்களும் அவர்களது சமுதாயத்தினரும் தாவா கோவில் இடத்தில் அமர்ந்து கோவில் சம்பந்தமாக ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தால் அப்போது இந்த 6, 7, 8 எதிர்மனுதாரர்கள்/ Proposed Parties அருகில் நின்று கொண்டிருந்து தங்களை மறைமுகமாக திட்டிக்கொண்டு மனுதாரர்களுடைய ஆலோசனைக்கு இடையூறு செய்துகொண்டிருந்து வருகிறார்கள் என்றும்,

இந்த 6 ஆம் எதிர்மனுதாரர் 3ம் பிரதிவாதியின் மனைவி என்றும், 7ம் எதிர்மனுதாரர் 2ம் பிரதிவாதியின் மனைவி என்றும், 8ம் எதிர்மனுதாரர், 6, 7 எதிர்மனுதாரர்களின் தோழி ஆவார் என்றும், ஆக பிரதிவாதிகள் தங்களிடம் வேண்டுமென்றே வீண்பிரச்சனை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு நேரடியாக எதுவும் பேசவராமல் மறைமுகமாக இந்த 2, 3 எதிர்மனுதாரர்கள் தங்களது மனைவிகளான இந்த 6, 7 Proposed Parties–களையும் இந்த 8ம் எதிர்மனுதாரரையும் கூட்டுச் சேர்த்து வைத்து மனுதாரர்களிடம் வீண்பிரச்சனை செய்து அதனை வைத்து பெண்களை மானபங்கம் செய்ததுபோல் ஒரு குற்ற நிகழ்வை உருவாக்குவதற்காக வேலைகளை செய்து வருகிறார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2. அதனைத் தொடர்ந்து, மனுதாரர்கள் முறையாக சட்ட நடவடிக்கை மேற்கொண்டு அதில் உத்தரவு பெற்ற பின்பு கோவில் காம்பவுண்ட் சுவர் கட்டுவது சம்பந்தமாக தங்களது சமுதாயத்தினரிடம் நிதி வசூல் செய்வதற்காக ஆலோசனை மேற்கொண்டிருந்தபொழுது இந்த 6, 7, 8 எதிர்மனுதாரர்கள்/புதிய கட்சிக்காரர்கள் சென்ற 20.12.2023 ஆம் தேதி மதியம் 12.00 மணியளவில் தங்களுடைய ஆலோசனை கூட்டம் அருகே வந்து ஒருமையில் பேசிக்கொண்டு இருந்து வந்ததால் மற்றவர்கள் ஆத்திரத்தோடு ஏழுந்தார்கள் என்றும், அப்போது மனுதாரர் தன்னுடன் இருந்தவர்களை அமைதியாக்கிக்கொண்டு கோவில்காரியம் முடியும் வரை எந்தவித வீண்பிரச்சனைகளும் செய்துகொண்டு தேவையில்லாமல் குற்றவழக்குகளில் ஈடுபத்திக்கொள்ள வேண்டாம் என்று சமாதனப்படுத்தி மேற்படி ஆலோசனையை பின்பு பார்த்துக்கொள்ளலாம் ஆலோசனையை வேறு இடத்தில் வைத்து பேசிக்கொள்ளலாம் என்று அங்கிருந்து கிளம்பிவிட்டார்கள் என்றும், மனுதாரர்கள் கோவில் பணிகளை செய்வதற்கு கடந்த ஒரு மாத காலமாக இந்த 6, 7, 8 எதிர்மனுதாரர்கள்

தடையாகவும், இடைஞ்சலாகவும் இருந்து வருகிறார்கள் என்றும், அதனால் அசல் வழக்கில் இந்த 6, 7, 8 எதிர்மனுதாரர்கள்/Proposed Parties– களை 6, 7, 8 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டும் என்று மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்படுகிறது.

<u>3. எதிருரையின் சுருக்கம்:–</u>

3.1. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சேர்ந்து வழக்கு நத்தம் புறம்போக்கு இடத்தில் ஊமக்காளி கோவில் மற்றும் மாமூண்டி கோவில் ஆகியவற்றை 100 வருடங்களுக்கு முன்பிருந்தே வழிபட்டு வந்துள்ளார்கள் என்றும், மேற்படி இரண்டு கோவில்கள் இருப்பதை மறைத்தும் மற்றும் ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்துடனும், மேற்படி மனுவை இந்த மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுவில் கூறியுள்ளது போல் இந்த 6, 7, 8 எதிர்மனுதாரர்கள் எவ்வித பிரச்சனைகளிலும் ஈடுபடவில்லை என்றும், மேலும், பொய்யாக சித்தரித்து இந்த 6, 7, 8 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்/வாதியிடம் அவர்கள் சமுதாயத்தினரிடமும் 20.12.2023 ஆம் தேதி மதியம் 12 மணியளவில் மனுதாரர்/வாதியின் ஆலோசனைக் கூட்டத்தில் தகராறு செய்ததாக பொய்யாக மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த 6, 7, 8 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்/வாதி நடத்திய ஆலோசனைக் கூட்டத்தின் போது மேற்படி கோவில் அருகில் கூட செல்லவில்லை என்றும், சம்பந்தமே இல்லாத இந்த 6, 7, 8 எதிர்மனுதாரர்களை வழக்கின் தரப்பினராக சேர்ப்பதற்கு வன்மையாக மறுக்கப்படுகிறது என்றும், மேலும் இந்த 8 வது எதிர்மனுதாரர் கோயம்புத்தூரில் நிரந்தரமாக குடியிருந்து வருகிறார் என்றும், மேற்படி ஆலோசனைக் கூட்டத்தின் போது எவ்வித தகராறும் செய்ய வாய்ப்பே இல்லை என்றும், அதனால் 6, 7, 8 எதிர்மனுதாரர்களை இந்த வழக்கின்

தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய அவசியமோ, தேவையோ இல்லை என்றும், 6, 7, 8 எதிர்மனுதாரர்கள் பெண்களாக உள்ளதாலும், போதிய கல்வியறிவு இல்லாதவர்களாக இருப்பதாலும் தொடர்ந்து விவசாயக் கூலிகளாக வேலைக்கு செல்வதாலும் மனுதாரர்/வாதியின் ஆலோசனைக் கூட்டத்தில் தகராறு செய்யும் அளவிற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் எழுகின்ற பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா**?** என்பதே ஆகும்.

**<u>6. தீர்வு:–</u>**

6.1. மனுதாரர் தரப்பில், மனுதாரரும் அவர்களது சமுதாயத்தினரும் தாவா கோவில் இடத்தில் அமர்ந்து கோவில் சம்பந்தமாக ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தால் அப்போது இந்த 6, 7, 8 எதிர்மனுதாரர்கள்/ Proposed Parties அருகில் நின்று கொண்டிருந்து தங்களை மறைமுகமாக திட்டிக்கொண்டு மனுதாரர்களுடைய ஆலோசனைக்கு இடையூறு செய்துகொண்டிருந்து வருகிறார்கள் என்றும், இந்த 6ஆம் எதிர்மனுதாரர் 3ம் பிரதிவாதியின் மனைவி என்றும், 7ம் எதிர்மனுதாரர் 2ம் பிரதிவாதியின் மனைவி என்றும், 8ம் எதிர்மனுதாரர், 6, 7 எதிர்மனுதாரர்களின் தோழி ஆவார் என்றும், ஆக பிரதிவாதிகள் தங்களிடம் வேண்டுமென்றே வீண்பிரச்சனை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு நேரடியாக எதுவும் பேசவராமல் மறைமுகமாக இந்த 2, 3 எதிர்மனுதாரர்கள் தங்களது

மனைவிகளான இந்த 6, 7 Proposed Parties–களையும் இந்த 8ம் எதிர்மனுதாரரையும் கூட்டுச் சேர்த்து வைத்து மனுதாரர்களிடம் வீண்பிரச்சனை செய்து வருகிறார்கள் என்றும், மனுதாரர்கள் கோவில் பணிகளை செய்வதற்கு கடந்த ஒரு மாத காலமாக இந்த 6, 7, 8 எதிர்மனுதாரர்கள் தடையாகவும், இடைஞ்சலாகவும் இருந்து வருகிறார்கள் என்றும், அதனால் அசல் வழக்கில் இந்த 6, 7, 8 எதிர்மனுதாரர்கள்/Proposed Parties–களை 6, 7, 8 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டும் என்று வாதிடப்பட்டது.

6.2. எதிர்மனுதாரர்கள் தரப்பில், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சேர்ந்து வழக்கு நத்தம் புறம்போக்கு இடத்தில் ஊமக்காளி கோவில் மற்றும் மாமூண்டி கோவில் ஆகியவற்றை 100 வருடங்களுடக்கு முன்பிருந்தே வழிபட்டு வந்துள்ளார்கள் என்றும், மேற்படி இரண்டு கோவில்கள் இருப்பதை மறைத்தும் மற்றும் ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்துடனும், இந்த மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுவில் கூறியுள்ளது போல் இந்த 6, 7, 8 எதிர்மனுதாரர்கள் எவ்வித பிரச்சனைகளிலும் ஈடுபடவில்லை என்றும், 6, 7, 8 எதிர்மனுதாரர்கள் பெண்களாக உள்ளதாலும், போதிய கல்வியறிவு இல்லாதவர்களாக இருப்பதாலும் தொடர்ந்து விவசாயக் கூலிகளாக வேலைக்கு செல்வதாலும் மனுதாரர்/வாதியின் ஆலோசனைக் கூட்டத்தில் தகராறு செய்யும் அளவிற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும் வாதிடப்பட்டது.

6.3. அசல் வழக்கில் இந்த 6, 7, 8 எதிர்மனுதாரர்கள்/Proposed Parties–களை 6, 7, 8 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டும் என்று மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

மனு, எதிருரை, ஆவணங்கள் மற்றும் வழக்குக் கோப்புகளை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது வழக்குச் சொத்தான வாதிக்கும் அவருடன் சேர்ந்த 27 பங்காளிகள் குடும்பங்களுக்கும் மாமூண்டி திருக்கோவில் பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரியும், வழக்குச் சொத்தான மாமூண்டி திருக்கோவிலுக்கு சுற்றுச் சுவர் அமைப்பதையும் மற்றும் அதன் கட்டுமான பணிகளையும் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எவ்வித தடையும் இடைஞ்சலும் செய்யக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுவாக, ஒரு வழக்கில் ஒரு நபரை அவசியமான தரப்பினராக சேர்க்க வில்லை என்றால் அந்த வழக்கில் ஒரு இறுதியான தீர்வு பிறப்பிக்க முடியாது. இந்த 6, 7, 8 எதிர்மனுதாரர்கள்/புதிதாக சேர்க்க வேண்டிய நபர்கள் அவசியமான தரப்பினர்கள் என்பதற்கு போதுமான சாட்சிய சான்றாவணங்கள் ஏதும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை கருத்தில் கொண்டும், மேலும், அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் 6, 7, 8 எதிர்மனுதாரர்கள் அவசியமான தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றாலும் இவ்வழக்கில் தீர்வு காண முடியும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுவது நீதியின்பால் உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. இறுதியாக மனுதாரர்கள் தாக்கல் செய்த இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 8 ஆம் நாள்

இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

**ஒம்/-சு.அபூர்வா,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**

**மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் :** இல்லை

**மனுதாரர் தரப்புசான்றாவணங்கள் :** இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை

**ஒம்/-சு.அபூர்வா,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**